1970 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பழைய சட்டத்தினுடைய நகலை அச்சடித்துத் தருவதற்கு இயலுமா என்பதை அந்த இலாக்காவில் கேட்டு முடிந்த வரையில் அதற்கான முயற்சியை மேற்கொள்கிறோம் என்ற அளவில் மட்டும் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சைக்கிளோஸ்டைல் பண்ணிக் கூடக் கொடுக்கலாம்.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் அகற்றப் படுவதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. (*) சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. இதைப் பத்திரிக்கையாளர்கள் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13-70)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இரண்டாவது பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் (எண் 3) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/70) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்து, பேரவை மீண்டும் திங்கட் கிழமை காலை 9 மணியளவில் கூடும்.